2010 ஏப்ரல் 15]

முற்பகல் 9-40

42—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***103447—திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விளாத்திகுளத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் 500-க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் உள்ளன. மிகவும் பின்தங்கிய மக்களைக் கொண்ட, மிகவும் பின்தங்கிய பகுதி அது. விளாத்திகுளம் வட்டம், வேம்பார், பூதலபுரம் போன்ற பகுதிகளிலிருந்து, 70 கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரத்தில் இருக்கும் கோவில்பட்டிக்குச் சென்றுதான், சாலை வரி கட்ட வேண்டியுள்ளது; தகுதிச் சான்று பெற வேண்டியுள்ளது; வாகனப் பதிவுச் சான்று பெற வேண்டியுள்ளது. ஒரு சிறிய விபத்து என்றாலும் சான்றிதழ் பெறுவதற்கு, 70 கிலோ மீட்டர் செல்ல வேண்டியுள்ளது. விளாத்திகுளம் மற்றும் எட்டயபுரம் தாலுகா பகுதிகளிலிருந்து 30,000-க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்களும், mini lorry-கள், பயணிகள் ஆட்டோ ரிக்ஷாக்கள் 900-க்குமேலும், லாரிகள் 500-ம் உள்ளன. அத்தோடு, விளாத்திகுளத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையும் உள்ளது. வேம்பார் மற்றும் பூதலபுரம் பகுதிகளிலிருந்து கோவில்பட்டிக்குச் செல்ல வேண்டுமென்றால், 3 பேருந்துகளில் ஏறி, இறங்கித்தான் செல்ல வேண்டும். அத்தோடு, கோவில்பட்டியில் மீண்டும் ஒரு பேருந்தைப் பிடித்துத்தான்,

போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும். ஆகையால், விளாத்திகுளத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் அமைத்திடுமாறு தங்கள்மூலம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் ஓர் இடத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமானால், 10,000 போக்குவரத்து வாகனங்கள் அந்தப் பகுதியிலே இருந்தாக வேண்டும். பகுதி அலுவலகம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 3,000-க்கும் அதிகமான போக்குவரத்து வாகனங்கள் இருந்தாக வேண்டும். தற்சமயம், விளாத்திகுளத்தில் ஆயிரத்திற்கும் குறைவான போக்குவரத்து வாகனங்களே உள்ளன. சரியாகச் சொல்ல வேண்டுமானால், தற்போது 736 போக்குவரத்து வாகனங்கள் மட்டுமே விளாத்திகுளம் பகுதியிலே உள்ளன.* Mini bus *6, சரக்கு வாகனங்கள் 300,* Maxi cab *65, ஆட்டோ ரிக்ஷா 45, பர்மிட் தேவையில்லாத சரக்கு வாகனங்கள் 310, சுற்றுலா சீருந்து 10. எனவே, விளாத்திகுளத்தில் தேவையான அளவிற்கு வாகனங்கள் இல்லாத காரணத்தால், அங்கே துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கின்ற சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. மேலும், விளாத்திகுளத்திலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற கோவில்பட்டியில் ஓர் அலுவலகம் இருக்கிறது. 38 கிலோ மீட்டர் தொலைவிலே தூத்துக்குடியிலே வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இயங்குகிறது. அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும், இந்த 4 ஆண்டுகாலத்தில் மட்டும், நம்முடைய அரசு, கிட்டத்தட்ட 43 புதிய அலுவலகங்களைத் திறந்திருக்கின்றது. இந்த ஆண்டு, மீண்டும் சட்டமன்றத்தில் எந்தெந்த இடத்தில் தேவை என்று சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்களோ, அவையெல்லாம் கருத்துரு வடிவிலே இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, மானியக் கோரிக்கை விவாதத்தின்போதுதான் அதுபற்றித் தெரிவிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.*

2010 ஏப்ரல் 15]

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரம் மற்றும் ஒட்டப்பிடாரம் பகுதியிலேயுள்ள வாகனங்களையெல்லாம் சேர்க்கும்போது அதிகமான வாகனங்கள் விளாத்திகுளம் பகுதியிலே இருக்கின்றன. அதுபோக, அங்கிருந்து கோவில்பட்டி 25 கிலோ மீட்டர் தூரம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். விளாத்திகுளத்திலேயிருந்தே கோவில்பட்டி 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. விளாத்திகுளம் தாலுகாவினுடைய கீழ்ப்பகுதியிலேயிருந்தும், வட பகுதியிலேயிருந்தும் கோவில்பட்டி 70 கிலோ மீட்டருக்குமேல் தூரம் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விளாத்திகுளத்திலிருந்து கமலாபுரம், கூத்தலூருணி, வள்ளிநாயகபுரம், வீரபாண்டியபுரம் வழியாக route number 83-D பேருந்தை தூத்துக்குடிக்கு கூடுதலாக இருமுறை இயக்கிடவும், கோவில்பட்டியிலிருந்து குளத்தூர்வரை செல்லும் route number 105 பேருந்தை, நமச்சிவாயபுரம், அருணாசலகுளம் வழியாக இயக்க வேண்டும். எந்த டெப்போவிலே வாகனங்களைக் கழிவு செய்தாலும் அவற்றை விளாத்திகுளத்திற்குத்தான் அனுப்பிவிடுகிறார்கள். எனவே, விளாத்திகுளம் பணிமனையில் ஓடும் பேருந்துகள் எல்லாம் பழையவை. அதனால், மிகவும் மோசமான பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகளை இயக்கிடுமாறு தங்கள்மூலம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவு செய்த பேருந்துகளை விளாத்திகுளத்திற்கு அனுப்புவதில்லை. இப்போதுகூட மதுரை மாநகரில் ஓடிக்கொண்டிருக்கின்ற Low Floor Bus-தாழ்தளப் பேருந்துகள்-170-ம் புதிதாக மதுரை நகருக்கு வந்து, அங்கே ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த தாழ்தளப் பேருந்துகள் புறநகர்ப் பேருந்துகளாக மாற்றப்பட்டு, தூத்துக்குடி மாவட்டத்திற்கும், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் இன்னும் இரண்டொரு நாட்களில் 200 புதிய பேருந்துகள் வரவிருக்கின்றன. எனவே, புதிய பேருந்து வேண்டுமென்று சொன்னால், அதை உடனடியாகக் கவனிக்க இயலும்.

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் என்று வருகின்றபோது, அதிலே தேவைக்கேற்ப வழங்க அரசு சில சட்டதிட்டங்களை

வைத்திருக்கிறது. அதற்கு உட்படுமானால்தான் அலுவலகம் திறக்கப்படும். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.*

முற்பகல் 9-45

திரு. கு. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், ஆத்தூரில் இருக்கும் வாகன ஆய்வாளர் அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக அறிவித்தார்கள். எனது தொகுதியில் வாகன ஆய்வாளர் அலுவலகம் — Unit office — இல்லாத ஒரு குறை இருந்துகொண்டிருக்கிறது. எனது சட்டமன்றத் தொகுதியில் கெங்கவள்ளியில், ஒரு வாகன ஆய்வாளர் அலுவலகமும், ஆத்தூரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூரில் இருக்கின்ற துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம் அவர்களும், ஏன், அம்மாவட்டத்தின் மாண்புமிகு அமைச்சர் அவர்களும்கூட தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அப்படித் தரம் உயர்த்துகின்றபோது கெங்கவள்ளியில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கின்ற சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மானியக் கோரிக்கை விவாதத்தின்போதுதான் அதைப்பற்றித் தெரிவிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*